செய்திக் குறிப்பு எண்:- 293 நாள்:- 07.11.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை –7.11.2013

ஈரோடு மாவட்டம், வனத் துறையில் வேட்டை தடுப்பு காவலராகப் பணி புரிந்து வந்த சத்தியமங்கலம் வட்டம், திங்களூர் கிராமம், கோட்டமாளம், வெள்ளைத் தொட்டி பகுதியைச் சேர்ந்த திரு. ராமதாஸ் என்பவர் 30.9.2013 அன்று ஆசனூர் வனச்சரகம், கோட்டமாளம் பீட், குத்தியாலத்தூர் காப்பு காட்டுப் பகுதியில், சுஜ்ஜல்கரை – காஜனூர் சாலையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த வேட்டை தடுப்புக் காவலர் ராமதாஸ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராமதாஸ் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9